www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

VNR8SS

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2024

-----

வகுப்பு 8

காலம்: 2.30 மணி | சமூக அறிவியல் | மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **15×1=15**

1) இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை
அ) வில்லியம் கோட்டை ஆ) செயின் ஜார்ஜ் கோட்டை
இ) ஆக்ரா கோட்டை ஈ) டேவிட் கோட்டை

2) பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு .............
அ) 1757 ஆ) 1764 இ) 1765 ஈ) 1775

3) ஆங்கிலேயரால் இரயத்துவாரி முறை அறிமுகப்படுத்தப்படாத பகுதி எது?
அ) பம்பாய் ஆ) மதராஸ் இ) வங்காளம் ஈ) இவற்றில் எதுவுமில்லை

4) வேலுநாச்சியார் எப்பகுதியின் ராணி ஆவார்?
அ) நாகலாபுரம் ஆ) சிவகிரி இ) சிவகங்கை ஈ) விருப்பாச்சி

5) ............. தொழில் இந்தியாவின் பழமையான தொழிலாகும்.
அ) நெசவு ஆ) எஃகு இ) மின்சக்தி ஈ) உரங்கள்

6) மண்ணின் முக்கிய கூறு
அ) பாறைகள் ஆ) கனிமங்கள் இ) நீர் ஈ) இவை அனைத்தும்

7) புவி பெறும் ஆற்றல் .............
அ) நீரோட்டம் ஆ) மின்காந்த அலைகள் இ) அலைகள் ஈ) வெப்பம்

8) குடிப்பதற்கு உகந்த நீரை ............. என்று அழைப்பர்.
அ) நிலத்தடி நீர் ஆ) மேற்பரப்பு நீர் இ) நன்னீர் ஈ) கார்ட்டீசியன் நீர்

9) காற்றில் உள்ள நைட்ரஜன் சதவீதம் .............
அ) 78.09% ஆ) 74.08% இ) 80.07% ஈ) 76.63%

10) மாநில அமைச்சரவைக் குழுவின் தலைவர்
அ) ஆளுநர் ஆ) முதலமைச்சர் இ) சபாநாயகர் ஈ) உள்துறை அமைச்சர்

11) இந்தியாவின் முதல் குடிமகன் யார்?
அ) பிரதமர் ஆ) குடியரசுத்தலைவர்
இ) முதலமைச்சர் ஈ) இந்திய தலைமை நீதிபதி

12) 1995 ஆம் ஆண்டில் உலகம் முழுவதிலும் இருந்து பெண்கள் .............இல் கூடினர்.
அ) பெய்ஜிங் ஆ) நியூயார்க் இ) டெல்லி ஈ) எதுவுமில்லை

13) சாலை பாதுகாப்பு வாரம் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படும் மாதம்
அ) டிசம்பர் ஆ) ஜனவரி இ) மார்ச் ஈ) மே

14) இந்திய ரூபாய் குறியீட்டினை (₹) வடிவமைத்தவர்
அ) உதயகுமார் ஆ) அமர்த்தியா சென்
இ) அபிஜித் பானர்ஜி ஈ) இவற்றில் எவரும் இல்லை

15) கல்கூர்லி சுரங்கம் ............. கனிமத்திற்குப் புகழ்பெற்றது.
அ) வைரம் ஆ) பிளாட்டினம் இ) வெள்ளி ஈ) தங்கம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:** **10×1=10**

16) 1857 ஆம் ஆண்டு புரட்சியை ............. என்பவர் 'முதல் இந்திய சுதந்திரப் போர்' என விவரிக்கிறார்.

17) ............. ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே தூரத்தை குறைத்தது.

18) இந்தியாவின் "உள்ளாட்சி அமைப்பின் தந்தை" என்று அழைக்கப்படுபவர் .............

19) வளிமண்டலத்திலிருந்து புவியை நோக்கி விழும் எல்லா வகையான நீருக்கும் ............. என்று பெயர்.

20) நிலச்சரிவு ............. இடருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

21) ஆப்பிரிக்காவின் மிக உயரமான சிகரம் ............. ஆகும்.

22) ஒருவர் சட்டப்பேரவை உறுப்பினராக ............. வயது நிறைவடைந்திருக்க வேண்டும்.

23) சமயச்சார்பின்மை ஜனநாயகத்தின் ஒரு பகுதி அது ............. அளிக்கிறது.

24) ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்ட ஆண்டு .............

25) ............. வாகனத்தில் வேகத்தைக் கட்டுப்படுத்துகின்றது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**III. பொருத்துக:** 10×1=10

26) ஆங்கிலேயர்கள் - வரிக்கோட்டு பாதை
27) பாரீஸ் உடன்படிக்கை - 1098
28) ஜான்சி - 1935
29) டார்ஜிலிங் - சுண்ணாம்பு பாறை தூண்கள்
30) நில அதிர்வு - லட்சுமிபாய்
31) புவியியல் காரணிகள் - மலை வாழிடங்கள்
32) பின்னாக்கல் - மூன்றாம் கர்நாடகப் போர்
33) குழந்தை உதவி மைய எண் - மூலப்பொருட்கள்
34) பாதசாரி - 1600
35) இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் - சுனாமி

**IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக:** 5×1=5

36) இரயத்துவாரி முறை தாமஸ் மன்றோவால் அறிமுகப்படுத்தப்பட்டது.
37) இந்தியா பருத்தி மற்றும் பட்டுத்துணிகளுக்கு புகழ்வாய்ந்தது.
38) குடிசைப் பகுதிகள் பொதுவாக பெருநகரங்களில் காணப்படுகிறது.
39) பாதை தடத்தை மாற்றும் முன்பு கண்ணாடியினைப் பார்க்க வேண்டும்.
40) **தவறான ஒன்றினை கண்டுபிடிக்க:**
அ) கடன் அட்டை ஆ) பண்டமாற்று முறை
இ) பற்று அட்டை ஈ) நிகழ்நிலை வங்கி

**V. சுருக்கமான விடையளி: (ஏதேனும் 10)** 10×2=20

41) ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறுகுறிப்பு வரைக.
42) இருட்டறை துயரச் சம்பவம் பற்றி குறிப்பு வரைக.
43) பாளையக்காரர்கள் என்பவர் யார்? சிலரின் பெயரைக் கூறுக.
44) மாகான நகரங்கள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக.
45) காலநிலை - வரையறு.
46) வறட்சியின் வகைகளைக் குறிப்பிடுக.
47) ஆப்பிரிக்கா 'தாய் கண்டம்' என அழைக்கப்படுவது ஏன்?
48) முதலமைச்சர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்?
49) மனித உரிமை என்றால் என்ன?
50) போக்குவரத்து சமிக்கைகளின் விளக்குகளின் படம் வரைந்து அதன் பொருளைக் குறிப்பிடு.
51) பண்டமாற்று முறை என்றால் என்ன?

**VI. விரிவான விடை தருக: (ஏதேனும் 6)** 6×5=30

52) நிலையான நிலவரி திட்டத்தின் நிறை, குறைகளை விளக்குக.
53) 1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான காரணங்களை எழுதுக.
54) மழைபொழிவின் பல வடிவங்களைப் பற்றி விவரி.
55) நீர் மாசுபாட்டால் ஏற்படும் விளைவுகள் குறித்து விரிவாக எழுதுக.
56) மூலப்பொருட்களின் அடிப்படையில் தொழிலகங்களை வகைப்படுத்தி எழுதுக.
57) குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அரசு மேற்கொண்டுள்ள சில நடவடிக்கைகள் யாவை?
58) சாலை விபத்துக்கள் நடைபெறாமல் தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?
59) பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை?

**VII.** 60) **கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்:** 5×1=5
(i) கள்ளிக்கோட்டை (ii) பாரக்பூர் (iii) ஜாம்ஷெட்பூர்
(iv) டெல்லி (v) ஜான்சி

61) **கீழ்க்கண்ட இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்:** 5×1=5
(i) கடகரேகை (ii) பசிபிக் பெருங்கடல் (iii) ஆப்பிரிக்கா
(iv) அட்லாண்டிக் பெருங்கடல் (v) சகாரா பாலைவனம்

-------------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com